FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364123

1. District : தென்காசி PS: உளவுத் துறை Year: 2026 FIR No.: 4/2026 Date: 19.06.2026
மாவட்டம் காவல்நிலையம் மற்றும் ஆண்டு மு.த.அ. எண் நாள்
கண்காணிப்பு பிரிவு

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7, 7(A)
(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 126
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 18.06.2026 நாள் முதல் 11.45 hrs நாள் வரை 23.00 hrs
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time : 17.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.06.2026 நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time : 17.50 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-II நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 55 கி.மீ வடகிழக்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் மொட்டார் வாகன ஆய்வாளர் நிலை
Beat Number : (b) Address : பகுதி அலுவலகம், கோரைக்குடி,
முறைக் காவல் எண் முகவரி தென்காசி மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. S. முத்துராமலிங்கம் (b) Father's/ Husband's Name : சுப்பிரமணி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 42/2026 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : இராமநாதபுரம், தென்காசி மற்றும் விருதுநகர் மாவட்டங்கள்
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திருமதி. P. அனிதா மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, 2. திரு. திரவணக்குமார் கண்காணிப்பாளர், 3. திரு. சம்பிரமணியன் இளநிலை உதவியாளர், 4. திரு. விஜயகுமார் DATA ENTRY OPERATOR (PONTON STAFF), 5. திரு. கண்ணன் Technical Assistant (PONTON STAFF), 6. திரு. தாவுத்ஷாஹுசேன் ஓட்டுநர் (Contract Basis), மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை I பகுதி அலுவலகம் கோரைக்குடி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— NIL —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— NIL —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு - NIL —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 19.06.2026 தேதி 17.30 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.S.முத்துராமலிங்கம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று, புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 19.06.2026-ம் தேதி 17.50 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/2026 u/s. 7, 7(A) of P.C Act 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and sec.106 BNSS-2023 ன்படி வழக்கு

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr. A. Kannan Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS. Sivagangai on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

19/06/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

19/06/26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

19.06.2026 at 18.30 hrs.

Name: பெயர் A. JOHN BRITTO
Rank: நிலை Dy. Superintendent of Police
V &AC, Sivagangai

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண்.4/2026 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி -

பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் S.முத்துராமலிங்கம், த/பெ.சக்திவேல், வருவாய் ஆய்வாளர், ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள், இராமநாதபுரம், பெறுநர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, சிவகங்கை, நாள்: 19.06.2026, பொருள்: சிவகங்கை மாவட்டம் - காரைக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 பகுதி அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் இணை சோதனை சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கக் கோருதல் தொடர்பாக, பார்வை : இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் ஆய்வுக்குழு ஆய்வாளர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் நாள்:18.06.2026, 18.06.2026ம் தேதி சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிலிருந்து தொடர்புகொண்டு, சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 பகுதி அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 ஆக பணிபுரிந்து வரும் திருமதி.அனிதா என்பவர் வாகனப்பதிவு, தகுதிச்சான்று, ஓட்டுநர் உரிமம், ஓட்டுநர் பழகுநர் உரிமம் மற்றும் வாகன உரிமையாளர் பெயர் மாற்றம் உள்ளிட்ட பணிகளுக்கு டிரைவிங் ஸ்கூல் மற்றும் வாகன விற்பனையாளர்களிடம் நேரடியாகவும், இடைத்தரகர்கள் மூலமாகவும் லஞ்சம் கேட்டுப்பெறுவதாகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் Phone pay / Google pay மூலமாக மேற்படி பணிகளுக்கு லஞ்சம் கேட்டுப்பெறுவதாகவும் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் ரகசிய தகவல் உள்ளதாக தெரிவித்ததன் பேரில், 18.06.2026-ஆம் தேதி சுமார் 11.45 மணிக்கு சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, இராமேஸ்வரம் - திருச்சி நெடுஞ்சாலையில், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை அலுவலகத்திற்கு நேர் எதிரே அமைந்துள்ள காரைக்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 பகுதி அலுவலகத்தில் இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள் ஆய்வுக்குழு ஆய்வாளராகிய நான் மற்றும் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.ஆ.ஜான் பிரிட்டோ மற்றும் குழுவினருடன் திடீர் இணை சோதனை மேற்கொள்ளப்பட்டது. திடீர் சோதனையின்போது, அலுவலகத்திலிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திருமதி.P.அனிதா மற்றும் அலுவலர்களிடம் அறிமுகம் செய்துகொண்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது. திடீர் சோதனையில், அலுவலகத்தின் வரவேற்பு அறையில் இருந்த திருமதி.அனிதா என்பவரை சிவகங்கை ஊ.த.க. பிரிவு சார்பு ஆய்வாளர்

திருமதி.கோகிலா என்பவர் மூலம் சோதனை செய்தபோது, அவரிடம் பணம் எதுவும் இல்லை. பணியாளர்கள் கையிருப்பு பதிவேட்டினை சரிபார்த்தபோது அன்றைய தினம் அவர் செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.200/- என குறிப்பிடப்பட்டிருந்தது. இதுகுறித்து அவரிடம் கேட்டபோது, மேற்படி பணத்தை காலை டிபன் சாப்பிட செலவாகிவிட்டதாக கூறினார். இந்த திடீர் சோதனையின்போது அலுவலகத்தின் கண்காணிப்பாளர் அறையில் இருந்த திரு.பொ.சரவணக்குமார், கண்காணிப்பாளர் என்பவரை சோதனை செய்தபோது அவரது இடதுபக்க மேல் பாக்கெட்டினுள் பணம் ரூ.550/- இருந்தது. பணியாளர்கள் கையிருப்பு பதிவேட்டினை சரிபார்த்தபோது அவர் சொந்த செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் ரூ.550/- என குறிப்பிடப்பட்டிருந்தது. இதுகுறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, மேற்படி பணம் ரூ.550/- தனது செலவுக்காக கொண்டு வந்திருந்த சொந்தப்பணம் என்று சொன்னதனால், மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவர் வைத்திருந்த SAMSUNG அலைபேசியில் உள்ள 9443851358- அலைபேசி எண்ணின் UPI பரிவர்த்தனைகளை ஆய்வு செய்தபோது, கீழ்க்கண்ட ஓட்டுநர் பயிற்சி பள்ளி, Consultings, வாகன விற்பனையகங்களில் பணிபுரியும் நபர்களிடமிருந்து பல்வேறு தேதிகளில் பணம் பெற்றுள்ளார் என்பது தெரிய வந்தது.

வ. எண்.	பெயர்	பரிவர்த்தனை காலம்	மொத்த பரிவர்த்தனை தொகை (ரூ).
1	முகமது நவீன் மீரா	பிப்ரவரி 2026 முதல் ஜீன் 2026 வரை	55,700/-
2	பழனிவேல்	மார்ச் 2026 முதல் ஜீன் 2026 வரை	35,950/-
3	ஆரிப் பர்வீன	ஜனவரி 2026 முதல் ஜீன் 2026 வரை	80,200/-
4	கார்த்தி கேயன்	ஏப்ரல் 2026 முதல் ஜீன் 2026 வரை	43,400/-
மொத்தம்			2,15,250/-

மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, முகமது நவீன் மீரா என்பவர் காரைக்குடி NAM Star Driving School-ல் பணிபுரிபவர் என்றும், பழனிவேல் என்பவர் சேகர் பஸ் கன்சல்டிங்கில் வேலை செய்பவர் என்றும், ஆரிப் பர்வீன் மற்றும் கார்த்திகேயன் ஆகியோர் பல்வேறு பணிகளுக்கு அலுவலகத்திற்கு வந்து சென்றவர்கள் என்றும் கூறினார், மேலும் அவரிடம் எதற்காக அவர்களிடம் பல்வேறு தேதிகளில் பணம் பெற்றுள்ளீர்கள் என

கேட்டதற்கு, அவர் சரியான முகாந்திரம் கூறவில்லை. எனவே, பணபரிவர்த்தனை விபரங்களை அவரது அலைபேசியில் இருந்து பதிவிறக்கம் செய்து, பிரிண்ட் எடுத்து, அதனை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது அலுவலகத்தின் உதவியாளர் 1 அறையிலிருந்த இளநிலை உதவியாளர் திரு.சு.சுப்பிரமணியன் என்பவரை சோதனை செய்தபோது, அவரது இடது பக்க மேல் பாக்கெட்டில் பணம் ரூ.250/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, தனது கை செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் என்றும், அதனை பணியாளர் கையிருப்புப்பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார். பணியாளர் கையிருப்பு பதிவேட்டினை சரிபார்த்ததில் சரியாக குறிப்பிடப்பட்டிருந்தது, எனவே மேற்படி பணம் ரூ.250/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, அலுவலகத்திலிருந்த அலுவலக உதவியாளர் திருமதி.M.சக்தி என்பவரை சார்பு ஆய்வாளர் திருமதி.கோகிலா என்பவர் மூலம் சோதனை செய்தபோது, அவரது சாம்பல் நிற ஹேண்ட் பேக்கில் பணம் ரூ.50/- இருந்தது. அந்தப் பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, சொந்த செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் என்று கூறினார். அலுவலக பண கையிருப்பு பதிவேட்டினை சரிபார்த்ததில் சரியாக குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே, மேற்படி பணம் ரூ.50/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. திடீர் சோதனையின்போது, அலுவலகத்தின் புகைப்படம் எடுக்கும் அறையிலிருந்த (BONTON Staff Room) திரு.T.விஜயகுமார், Data Entry Operator என்பவரை சோதனை செய்தபோது, இடதுபக்க மேல் பாக்கெட்டில் பணம் ரூ.150/- இருந்தது. அலுவலக பண கையிருப்பு பதிவேட்டினை சரிபார்த்ததில் பணம் ரூ.210/- என குறிப்பிடப்பட்டிருந்தது. இதுகுறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, காலை டீ மற்றும் டிபன் சாப்பிட்டதற்கு ரூ.60/- செலவாகிவிட்டதாகவும், மீதம் ரூ.150/- வைத்துள்ளதாகவும் கூறினார். ஆகவே, மேற்படி பணம் ரூ.150/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவர் வைத்திருந்த REALME அலைபேசியில் உள்ள 9865358779- அலைபேசி எண்ணின் UPI பரிவர்த்தனைகளை ஆய்வு செய்தபோது, கீழ்க்கண்ட ஓட்டுநர் பயிற்சி பள்ளி, வாகன விற்பனையகங்களில் பணிபுரியும் நபர்களிடமிருந்து பல்வேறு தேதிகளில் பணம் பெற்றுள்ளார் என்பது தெரிய வந்தது.

வ. எண்.	பெயர்	பரிவர்த்தனை காலம்	மொத்த பரிவர்த்தனை தொகை (ரூ).
1	மீனாள் டிரைவிங் ஸ்கூல் 9865166474	26.04.2025 முதல் 12.06.2026 வரை	11300
2	மார்வலஸ் டிரைவிங் ஸ்கூல் 9994253424	03.12.2025 முதல் 15.06.2026 வரை	4090
3	செந்தில்குமார் consulting	20.11.2024 முதல் 12.06.2026 வரை	3000
4	குகன் 9677575245	09.08.2023 முதல் 12.06.2026 வரை	14690
5	கார்த்திகேயன் 9894590397	03.05.2021 முதல் 11.06.2026 வரை	13440
6	பரமேஸ்வரன் 9552464117	04.10.2024 முதல் 06.06.2026 வரை	147990
7	விஜய் ஆனந்த் 9500252595	07.10.2022 முதல் 04.06.2026 வரை	29570
8	ஆரிப் 9940918029	13.01.2023 முதல் 02.06.2026 வரை	10600
9	முகமது நவீன் மீரா	மே 2025 முதல் ஜனவரி 2026 வரை	5200
மொத்தம்			239880

மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, மேற்படி நபர்களிடமிருந்து அவர்களது விண்ணப்பங்களுக்கு ஏற்றாற்போல், அவர்களது வேலைகளை முடித்து கொடுப்பதற்காக தனது Google Pay கணக்கிற்கு அனுப்பியதாக கூறினார். எனவே, மேற்படி பணபரிவர்த்தனை விபரங்களை அவரது அலைபேசியில் இருந்து பதிவிறக்கம் செய்து, பிரிண்ட் எடுத்து, அதனை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திடீர் சோதனையின்போது, அலுவலகத்தின் புகைப்படம் எடுக்கும் அறையிலிருந்த (BONTON Staff Room) திரு.சு.கண்ணன், Technical Assistant என்பவரை சோதனை செய்தபோது, வலது பின்பக்க பேண்ட் பாக்கெட்டில் பணம் ரூ.540/- இருந்தது. அலுவலக பண கையிருப்பு பதிவேட்டினை சரிபார்த்ததில் பணம் ரூ.560/- என குறிப்பிடப்பட்டிருந்தது. இதுகுறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, காலை டீ சாப்பிட்டதற்கு ரூ.20/- செலவாகிவிட்டதாகவும், மீதம் ரூ.540/- வைத்துள்ளதாகவும் கூறினார். ஆகவே, மேற்படி பணம் ரூ.540/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவர் வைத்திருந்த HMD

அலைபேசியில் உள்ள 9489772699 - அலைபேசி எண்ணின் UPI பரிவர்த்தனைகளை ஆய்வு செய்தபோது, கீழ்க்கண்ட NAM Star ஓட்டுநர் பயிற்சி பள்ளி, காரைக்குடி Susuki, தேவகோட்டை NNL, காரைக்குடி Bajaj வாகன விற்பனையகங்களில் பணிபுரியும் நபர்களிடமிருந்து பல்வேறு தேதிகளில் பணம் பெற்றுள்ளார் என்பது தெரிய வருகிறது.

வ. எண்.	பெயர்	பரிவர்த்தனை காலம்	மொத்த பரிவர்த்தனை தொகை (ரூ).
Phone-pay Transaction			
1	சுசுகி	நவம்பர் 2024 முதல் ஜீன் 2026 வரை	5920/-
2	NNL	நவம்பர் 2024 முதல் ஜீன் 2026 வரை	13400/-
3	Bajaj	நவம்பர் 2024 முதல் ஜீன் 2026 வரை	10320/-
4	NAM Driving School	நவம்பர் 2024 முதல் ஜீன் 2026 வரை	3820/-
மொத்தம்			33,460
Google Pay Transaction			
1	மனோநந்தகுமார்	16.06.2026	3500
2	சுரேஷ்குமார்	02.06.2026	2000
3	மனோநந்தகுமார்	02.06.2026	1500
4	மஞ்சூர் அலி	11.06.2026	1130
5	விஸ்வநாதன்	11.06.2026	3050
6	ரமேஸ்	06.06.2026	500
7	கிஷோர் குமார்	01.06.2026	7500
8	கணேசன் புவனா	01.06.2026	2900
9	விஸ்வநாதன் வேணுகோபால்	21.05.2026	500
10	சீதாராம் ரகுபதி	26.05.2026	11350
11	கிர்லோஸ்	24.05.2026	3000
12	ஐயப்பன் விஜய்	20.05.2026	1000
13	கிங் ஆப் கிங்	13.05.2026	2600
14	பிரபாகரன் பிரபா	05.05.2026	1000
15	சீதாராம் ரகுபதி	30.05.2026	64500
16		28.05.2026	2300
17		24.05.2026	8500
18	இளையராஜா	21.04.2026	2000
19	காளீஸ்வரன்	14.04.2026	4000
20	பாஸ்கரன்	13.04.2026	5650
21	பாலபவித்ரா	11.04.2026	2500
			130980

மேற்படி பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, மேற்படி டிரைவிங் ஸ்கூல் மற்றும் Dealers -களிடமிருந்து விண்ணப்பம் ஒன்றுக்கு ரூ.10/- வீதம் கணக்கிட்டு அவ்வப்போது Phone pay மற்றும் Google Pay மூலம் பெற்றதாகவும் கூறினார். சில பரிவர்த்தனைகளுக்கு அவர் சரியான முகாந்திரம் கூறவில்லை. எனவே, பணபரிவர்த்தனை விபரங்களை அவரது அலைபேசியில் இருந்து பதிவிறக்கம் செய்து, பிரிண்ட் எடுத்து, அதனை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, அலுவலகத்திலிருந்த ஒப்பந்தப்பணி ஓட்டுநர் திரு.செ.காளீஸ்வரன் என்பவரை சோதனையிட்டபோது, அவரிடம் பணம் எதுவும் இல்லை. பணியாளர்கள் கையிருப்புப்பதிவேட்டில் அன்றைய தினம் அவரது பெயரில் பதிவு இல்லை. அவரிடம் விசாரித்தபோது, பணம் அன்று கொண்டு வராத காரணத்தினால் மேற்படி பதிவேட்டில் பதிவு செய்யவில்லை எனவும், செலவிற்காக பணம் கொண்டு வரும் நாட்களில் மட்டும் மேற்படி பதிவேட்டில் பதிவு செய்வேன் என்றும் கூறினார். அவரது SAMSUNG A55 அலைபேசியின் 8760646889 அலைபேசி எண்ணின் Phone Pay / G.Pay பரிவர்த்தனைகளை ஆய்வு செய்தபோது, கீழ்க்கண்ட பரிவர்த்தனை விபரங்கள் தெரிய வந்தது.

Phone Pay Transaction

பெயர் மற்றும் அலைபேசி எண்	தேதி	தொகை
சேக் 9442756874	13.05.2026	7200
சேக் 9442756874	10.05.2026	9800
தாமஸ் 9843218125	16.04.2026	2500
குணால் ராகுல் 9025344095	08.04.2026	15000
		34500

Google Pay Transactions

பெயர் மற்றும் அலைபேசி எண்	தேதி	தொகை
சுதா பழனி 8610702497	17.06.2026	17500
ராஜ கணபதி 7708030789	12.06.2026	9800
ராஜ கணபதி 7708030789	10.06.2026	10000
பழனி வேல் 9751978481	10.06.2026	22000
தர்மராஜன் 9486448413	09.06.2026	7000
AKN Kalees Transport 6383438364	07.06.2026	1000
Sharvin Transport	06.06.2026	1000

7871721128		
Ms M.பிரவீனா 9025344095	04.06.2026	4500
இளையராஜா RMT Transport 8220999801	02.06.2026	7200
தேவேந்திரன் லோகேஸ் 7871315555	29.05.2026	5500
AKN Kalees Transport 6383438364	15.05.2026	4800
பிரகலாதன் தசரதன் 9786269657	15.05.2026	33500
AKN Kalees Transport 6383438364	15.05.2026	2000
அஜீத்குமார் 8072975521	14.05.2026	7080
சுஜீலா சண்முகம்	12.05.2026	99999
ஜனா	12.05.2026	15000
பழனியப்பன் செல்லையா 9551313666	11.05.2026	27100
முத்து குமரேசன் 9442432661	08.05.2026	35820
		310799

மேற்படி பண பரிவர்த்தனைகள் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, மேற்படி பணபரிவர்த்தனைகள் அனைத்தும் சாலை வரிக்கு உண்டான பணம் என்றும், அந்தந்த தேதிகளில் தனது கணக்கிலிருந்து செலுத்தி, அவர்களுக்கு ரசீது அனுப்பியுள்ளதாகவும், மேற்படி தனது கணக்கிற்கு பணம் அனுப்பியவர்கள் தனக்கு உறவினர்கள் மற்றும் தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆன்லைனில் சாலை வரி செலுத்தி கொடுத்ததாகவும் கூறினார். மேற்படி பரிவர்த்தனைகள் சம்மந்தமான விபரங்களை அவரது அலைபேசியிலிருந்து பதிவிறக்கம் செய்து, பிரிண்ட் எடுத்து அதனை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலகத்திற்கு எதிரே சாலை ஓரத்தில் அமைந்துள்ள இளநீர் கடை வைத்து நடத்தி வரும் தனியர் திரு.S.டேவிட் என்பவர் மேற்படி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.சுப்பிரமணியன் என்பவருக்கான பணத்தை வாங்கி வைத்திருந்து கொடுப்பதாக கிடைத்த தகவலின் பேரில், திரு.டேவிட் என்பவரை விசாரணை செய்தபோது, அவர் கடந்த 3 ஆண்டுகளாக இளநீர் மற்றும் டீ வியாபரம் செய்து வருவதாகவும், தனது கடையிலிருந்து திரு.சுப்பிரமணியன் என்பவர் கணக்கு வைத்து டீ மற்றும் இளநீர் சாப்பிட்டு வந்ததாகவும், அந்த விபரத்தை ஒரு நோட்டில் எழுதி வைத்துள்ளதாகவும், அவர் தனக்கு தரவேண்டிய பணத்தை சுப்பிரமணியன்

சொன்னதன்பேரில் NAM Driving School-ல் பணிபுரிந்து வரும் திரு.நவீன் என்பவர் தனது அலைபேசி எண்.9976005985-ல் உள்ள Phone Pay கணக்கிற்கு 06.06.2026ம் தேதி ரூ.2000/-மும், 30.04.2026ம் தேதி ரூ.1000/-மும், 11.04.2026ம் தேதி ரூ.100/-ம் ஆக மொத்தம் ரூ.3100/- அனுப்பினார். அதேபோல, மேற்படி திரு.சுப்பிரமணியன் சொன்னதன்பேரில் திரு.பரமேஸ் என்பவர் தனது Google Pay கணக்கிற்கு 15.05.2026ம் தேதி ரூ.1919ம், 14.01.2026ம் தேதி ரூ.900/-ம், 14.07.2025ம் தேதி ரூ.600/-, 08.05.2025ம் தேதி ரூ.500/-, 16.04.2025ம் தேதி ரூ.150/-, 19.02.2025ம் தேதி ரூ.700/-, 05.12.2024ம் தேதி ரூ.60/-, 06.08.2024ம் தேதி ரூ.400/- ஆக மொத்தம் ரூ.5229/- அனுப்பியுள்ளார் என்ற விபரத்தை தெரிவித்தார். மேற்படி பணம் அனைத்தும் திரு.சுப்பிரமணியனுக்கு அவர் சொன்னதன்பேரில் மேற்படி இரண்டு பேரும் தனக்கு அனுப்பினார்கள் என்ற விபரத்தை தெரிவித்தார். மேலும் அவரிடமிருந்து விசாரணைக்காக அவர் இளநீர் மற்றும் டீ கணக்கு எழுதிய வைத்திருந்த SUN SERIES என்று குறிப்பிடப்பட்டுள்ள நோட்டினை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர், விசாரணைக்காக கேட்டதன் பேரில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 திருமதி.அனிதா ஆஜர் செய்த 1) 2026ம் ஆண்டு பணியாளர்கள் வருகைப்பதிவேடு, 2) பாண்டன் மற்றும் ஒப்பந்த பணியாளர்கள் வருகைப்பதிவேடு, மற்றும் 3) பணியாளர்கள் கையிருப்பு பதிவேடு ஆகியவற்றை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது அலுவலகத்தில் பணியிலிருந்த 1) திருமதி.அனிதா, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1, 2) திரு.சரவணக்குமார் கண்காணிப்பாளர், 3) திரு.சுப்பிரமணியன் இளநிலை உதவியாளர், 4) திருமதி.சக்தி அலுவலக உதவியாளர், 5) திரு.விஜயகுமார், Data Entry Operator, 6) திரு.கண்ணன் Technical Assistant, 7) திரு.காளீஸ்வரன் ஓட்டுநர் மற்றும் 8) திரு.டேவிட் (தனியர்) ஆகியோரை ஆய்வுக்குழு ஆய்வாளராகிய நான் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனை தொடர்பான செயல்முறை நடவடிக்கை குறிப்புகள் 18.06.2026-ம் தேதி 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் இணைச்சோதனையின்போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்கள் ஆகியவற்றை விசாரணைக்காக இத்துடன் இணைத்துள்ளேன். இந்த திடீர் சோதனை சம்மந்தமாக திருமதி.அனிதா, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, திரு.சரவணக்குமார் கண்காணிப்பாளர், திரு.சுப்பிரமணியன் இளநிலை உதவியாளர், திரு.விஜயகுமார் Data Entry Operator (PONTON Staff), திரு.கண்ணன் Technical Assistant (PONTON Staff),

திரு.காளீஸ்வரன் ஓட்டுநர் (Contract Basis) ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இணைப்பு மேற்கண்டவாறு. இப்படிக்கு ஒப்பம் S.முத்துராமலிங்கம்

Sir, Received the complaint on 19.06.2026 at 17.30 hrs. Found prima facie for the allegation of the complaint. Since, the matter is intimated to the SP/SR, V&AC, Chennai, obtained permission from the SP/SR, V&AC, Chennai and registered a case in Sivagangai V&AC Crime.No.4/2026 u/s 7, 7(A) of P.C Act, 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and sec.106 BNSS 2023 on 19.06.2026 at 17.50 hrs. sd.A.John Britto, Dy. Superintendent of Police, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு மற்றும் ஆய்வுழு ஆய்வாளரால் பெறப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

19/06/26

DEPUTY SUPERINTENDENT OF POLICE,
VIGILANCE AND ANTI-CORRUPTION,
SIVAGANGAI.